**செய்தி வெளியீடு எண்: 622** **நாள்:21.09.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.9.2019 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில், 27 கைத்தறி நெசவாளர்களுக்கு, மாநில அளவில் சிறந்த நெசவாளர் விருது (பட்டு மற்றும் பருத்தி), சிறந்த வடிவமைப்பாளர் விருது, திறன்மிகு நெசவாளர்கள் விருது மற்றும் விருதுகளுக்குரிய பரிசுத் தொகையான 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

கைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் 4 இணை விலையில்லா சீருடை வழங்கும் திட்டம், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம், நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம், கைத்தறி ஆதரவு திட்டம், மாநில அளவில் சிறந்த நெசவாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம், திறன்மிகு நெசவாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு 2013–14ஆம் ஆண்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் அதிக உற்பத்தி மற்றும் விற்பனையில் குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்பினையும் நல்கிய சிறந்த நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் “மாநில அளவிலான சிறந்த நெசவாளருக்கான விருதுடன்” 1 லட்சம் ரூபாய் ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தினை மேலும் விரிவுப்படுத்தி, அதிக எண்ணிக்கையிலான நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில், சட்டப்பேரவையில் 2018–19ஆம் ஆண்டிற்கான கைத்தறித் துறை மானியக் கோரிக்கையின்போது, பட்டு இரகம் உற்பத்தி செய்யும்

நெசவாளருக்கு முதல் பரிசாக 1 லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பருத்தி இரகம் உற்பத்தி செய்யும் நெசவாளருக்கு முதல் பரிசாக 1 லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள வடிவமைப்பாளர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறந்த வடிவமைப்பாளர்களை தேர்வு செய்து முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 5 ஆயிரம் ரூபாயும் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2019–20ஆம் ஆண்டிற்கு மாநில அளவில் அதிக உற்பத்தியும், விற்பனையும் பெற்றுத்தந்த பட்டு இரகத்திற்கான சிறந்த கைத்தறி நெசவாளருக்கான முதல் பரிசாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையை சேலம் சரகம், ஜே.ஒ. கொண்டலாம்பட்டி பருத்தி மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் திரு.கே.சுப்ரமணி என்பவருக்கும், பருத்தி இரகத்திற்கான சிறந்த கைத்தறி நெசவாளருக்கான முதல் பரிசாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையை பரமக்குடி சரகம், கலைமகள் பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் திரு. கே.கே.பாண்டுரங்கன் என்பவருக்கும்;

இரண்டாம் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை திரு. ஆர்.பாபு (பட்டு இரகம்) மற்றும் திருமதி எஸ்.மல்லிகா (பருத்தி இரகம்) ஆகியோருக்கும், மூன்றாம் பரிசாக தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை திரு.எஸ்.கே. சரவணன் (பட்டு இரகம்) மற்றும் திருமதி ஆர்.ராதாமணி (பருத்தி இரகம்) ஆகியோருக்கும்;

சிறந்த வடிவமைப்பாளருக்கான முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை கும்பகோணம் சரகம், திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க வடிவமைப்பாளர் திரு. எம்.கார்த்திகேயன் என்பவருக்கும்;

சிறந்த வடிவமைப்பு மற்றும் தரத்துடன் கூடிய கைத்தறி இரகங்களை நெசவு செய்தமைக்காக, 20 திறன்மிகு நெசவாளர்களுக்கு முதல் பரிசாக தலா 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் சான்றிதழ்கள்;

என மொத்தம், 27 கைத்தறி நெசவாளர்களுக்கு விருதுகளுக்குரிய பரிசுத் தொகையான 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், நாமக்கல் மாவட்டத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் திருச்செங்கோடு சரக உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அண்ணா கூட்டுறவு நூற்பாலை, பாரதி கூட்டுறவு நூற்பாலை, கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஆகிய நூற்பாலைகளில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான நிரந்தர பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் குடும்பத்தை சார்ந்த 5 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், ஓட்டுநர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் முனைவர் மு.கருணாகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**